பெருந்துறை கூட்டுறவு நெசவாளர் சங்கம்.

712--(* வினா எண் 4744) திரு. கு. ரமணி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பெருந்துறையில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கம் (இ. ஹெச். நெ. 40) கடந்த இரண்டாண்டு களாக செயல்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெரியார் மாவட்டம் பெருந்துறையில் உள்ள காமாட்சி அம்மன் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அதனுடைய தலைவர் சங்க மேலாளர் இருவரும் 3 இலட்சத்திற்கு மேல் கையாடல் செய்ததால் கடந்த ஓராண்டு காலமாக செயல்படாமல் இருந்தது.

(ஆ) சங்கத்தினை நல்ல முறையில் இயங்க வைக்க தேவை யான நடவடிக்கைகள் எடுக்கும் நோக்குடன் 1961 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவு சட்டம் 53 பிரிவு 119 "(ஏ)"-ன் கீழ் துறை அலுவலர் ஒருவர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிதாக ஒரு சில உறுப்பினர்களை சேர்த்து தக்க முறையில் கைத்தறி தீவிர வளர்ச்சி திட்டத்திலிருந்து மூலப்பொருட்கள் பெற்று வரவு-செலவு செய்ய துறை செயலாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-40)

திரு. டி. என். முருகானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலை நலிவுற்று சிக் யூனிட்டாக மாறும் நிலைமையில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் அரும் முயற்சியால் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அந்தக் கூட்டுறவு நூற்பாலை தொடர்ந்து நடத்தப்பட்டு இலாபம் ஈட்டப்படவேண்டும் என்றால் நிதியுதவி அதற்குத் தேவையாகும்.

1986 மே 8]

எனவே அந்தச் சாரம் கூட்டுறவு நூற்பாலைக்கு வேஸ் அண்ட் மீன்ஸ் அட்வான்ஸ் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு முன்வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறையில் இருக்கின்ற கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெளிவாகக் கூற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை காமாட்சியம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 23—3—1978-ல் பதிவு செய்யப்பட்டது. அந்தச் சங்கத்திலுள்ள தலைவர் மற்றும் மேலாளர் 3,16,787 ரூபாய், 79 பைசா கையாடல் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு 18—1—1984-ல் வழக்கு தொடரப்பட்டது. 24—2—1984-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் இருக்கிறது. சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புத் தொகையை ஈடு செய்ய தமிழ்நாடு கூட்டுறவு சட்டம் 71-வது விதியின் கீழ் தண்ட வசூல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமை பெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்விதான் 15 நாட்களுக்கு முன்பு இதே அவையில் வைக்கப்பட்டது. இதிலேயிருந்து தெரிகிறது அந்தச் சங்கம் செயல்படாமல் போய் அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் எல்லாம் எவ்வளவு தூரம் அல்லல் படுகிறார்கள் என்று. அவர்களுடைய குறையைத் தீர்க்க புதிதாக சங்கம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். எனவே இதுபோன்ற கோரிக்கையை அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து புதிய சங்கம் அமைக்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சங்கம் அமைப்பது அவசியம் என்று துணை இயக்குநர் பரிந்துரை செய்து அனுப்பினால் அரசு ஆய்வு செய்து முடிவு எடுக்கும்.

சாத்தூர் வட்டத்தில் தொழிலியல் நெசவுக் கூடங்கள்.

713—(*வினா எண். 7864) திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசித் தொகுதி, தா. ராமலிங்காபுரம், வி. துரைச்சாமிபுரம் என்ற விஜயரெங்கபுரம் கிராமங்களில் கட்டப்படும் தொழிலியல் நெசவுக் கூடங்களின் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எப்பொழுது வேலை முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இராமலிங்காபுரத்திலும் மற்றும் வி. துரைச்சாமிபுரத்திலும் கட்டப்பட்டு வரும் தொழிலியல் நெசவுக் கூடங்கள் முறையே ரூபாய் 6 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டிலும் 12 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) (1) தா. இராமலிங்கபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தொழில் கூட கட்டுமானப் பணி கூரை மட்டம் வரை முடிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெறப்பட வேண்டிய ரூ. 2.80 இலட்சம் பெறப்படாமையால் நிலுவையில் உள்ளது. இந்நிதியுதவி பெறப்பட்ட பின் இரண்டு அல்லது மூன்று திங்களில் முடிக்கப்பட்டு விடும்.

(2) வி. துரைசாமிபுரத்திலுள்ள சௌடாம்பிகை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தொழில்கூட கட்டுமானப் பணி கூரை மட்டம் வரை முடிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திலிருந்து ரூ. 2.80 இலட்சம் வழங்கப்படுமானால் இச்சங்க கட்டுமானப் பணி 30—6—1986-க்குள் முடிவு பெற்று விடும்.